டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 160 | 4.12.2025 | THURSDAY | KARTHIGAI : 17 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 160 | 4.12.2025 | வியாழக்கிழமை | கார்த்திகை : 17 | விலை : ரூ.5/- |

3 பிரதமர் மோடி குறித்து காங். பிரமுகர் வெளியிட்ட ஏஐ வீடியோவால் சர்ச்சை

4 கரூர்: தவெக கூட்ட நெரிசல் நிகழ்விடத்தில் உச்ச நீதிமன்ற ஓய்வு நீதிபதி அஜய் ரஸ்தோகி ஆய்வு

2 மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை கருணை அல்ல, உரிமை: முதல்வர் ஸ்டாலின் பேச்சு

# 'ரோடுஷோ' அனுமதிக்காக தொடர் முயற்சி : புதுச்சேரி முதல்வருடன் புஸ்ஸி ஆனந்த் சந்திப்பு

புதுச்சேரி, டிச.4-

ரோடு ஷோ நடத்த அனுமதி கோரி புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் இன்று (புதன்கிழமை) மீண்டும் சந்தித்தார். இம்முறை ஈசிஆரில் நடத்த அனுமதி கோரினார். ஆனால், காவல்துறை அதிகாரிகள் ரோடு ஷோ நடத்த திட்டவட்டமாக அனுமதி மறுத்தனர். அதற்குப் பதிலாக பொதுக்கூட்டம் நடத்த விண்ணப்பிக்கலாம் என்றனர்.

புதுவையில் தவெக தலைவர் விஜய் டிச.5ம் தேதி ரோடு ஷோ நடத்த முடிவு செய்து காவல்துறையிடம் தவெக தரப்பில் அனுமதி கேட்கப்பட்டது. கரூர் துயரச் சம்பவத்தை தொடர்ந்து தமிழகத்தில் ரோடு ஷோ நடத்த அனுமதி வழங்கப்படவில்லை. மேலும், ரோடு ஷோவுக்கு விதிமுறைகள் வழங்குவது தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இதனிடையே, தவெக பொதுச்செயலர் புஸ்ஸி ஆனந்த் புதுச்சேரி வந்து காவல்துறை அதிகாரிகள், முதல்வரை சந்தித்தார். நேற்று தவெக பொதுச் செயலர்கள் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா நேரில் வந்து 4வது முறையாக முதல்வர், காவல்துறை அதிகாரிகளை சந்தித்தனர். இருப்பினும் ரோடுஷோ நடத்த அனுமதி மறுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து இன்று காலை சட்டப்பேரவையிலுள்ள முதல்வர் அறைக்கு காவல்துறை டிஜிபி ஷாலினி சிங், ஐஜி அஜிஸ்குமார் சிங்ளா, டிஐஜி சத்தியசுந்தரம் உள்ளிட்டோர் வந்தனர்.



அதைத்தொடர்ந்து சட்டத்துறை அமைச்சர் லட்சுமி நாராயணனும் வந்தார். அவர்கள் முதல்வர் ரங்கசாமியுடன் ஆலோசனை நடத்தினர்.

அதில், விஜய் பங்கேற்கவிருந்த ரோடு ஷோவுக்கு புதுச்சேரியில் அனுமதி தராதது ஏன் என்பது பற்றியும், உயர் நீதிமன்ற உத்தரவு விவரமும் முதல்வர் ரங்கசாமிக்கு முழுமையாக தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

தொடர்ந்து, பயிற்சி பெற்றும் பணி வாய்ப்பு இல்லாமல் உள்ள 68 ஊர்க்காவல் படை வீரர்கள் நிலை தொடர்பாகவும் முழுமையாக விவாதித்தனர் என்றும் தெரிகிறது.

அதைத்தொடர்ந்து புஸ்ஸி ஆனந்த் மீண்டும் சட்டப்பேரவையில் உள்ள முதல்வர் அறையில் ரங்கசாமியை சந்தித்தார். அதனைத் தொடர்ந்து முதல்வர் ரங்கசாமி காவல்துறை அதிகாரிகளிடம் பேசினார். முதல்வர் சந்திப்புக்கு பின் வெளியே வந்த புஸ்ஸி ஆனந்த், செய்தியாளர்களின் கேள்விக்கும் பதில் அளிக்கவில்லை.

இதையடுத்து காவல்துறை மற்றும் முதல்வர் அலுவலக வட்டாரங்களில் விசாரித்தபோது, விஜய் ரோடு ஷோவுக்கு முன்பு தவெக தரப்பில் தந்த சாலை பகுதி, மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்ததால் மறுக்கப்பட்டது. தற்போது புதுச்சேரி ஈசிஆரில் சிவாஜி சிலை முதல் கொக்கு பார்க் வரை சுமார் 1.5 கி.மீ தொலைவுக்கு விஜய் ரோடு ஷோ நடத்த அனுமதிக்க வேண்டும். மேலும், இப்பகுதியில் சாலை அகலமாக இருக்கும் என்று புஸ்ஸி ஆனந்த் முதல்வரிடம் கோரினார். ஆனால், அதற்கு காவல்துறை அதிகாரிகள் ரோடு ஷோவுக்கு அனுமதி கிடையாது என்றும், பொதுக்கூட்டம் நடத்த விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

## ரெட்டியார்சத்திரத்தில் பழனி கோவிலுக்கு சொந்தமான நிலம் மீட்பு செய்திகளை சேகரிக்கச்சென்றவர் மீது கோவில் காவலர்கள் கொலைவெறி தாக்குதல்

### தமிழக முழுவதும் அனைத்து கட்சிகளும் கடும் கண்டனம்

சின்னாளபட்டி, டிச.04

ரெட்டியார்சத்திரத்தில் பழனி கோவிலுக்கு சொந்தமான நிலம் மீட்பு செய்திகளை சேகரிக்கச்சென்றவர் மீது கோவில் காவலர்கள் கொலைவெறி தாக்குதல் நடத்தியதற்கு தமிழக முழுவதும் அனைத்து கட்சிகளும் கடும் கண்டனம தெரி வித்தள்ளனர். திண்டுக்கல் அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் செய்தியாளர்கள் செல்வம், முரளிக்கு அனைத்து கட்சி நிர்வாகிகள் நேரில் வந்து ஆறுதல் கூறினார்கள். பழனி கோவில் உதவி ஆணையாளர் லட்சுமியை இடமாற்றம் செய்ய வேண்டும் என அனைத்து பத்திரிக்கையாளர்களும் கோரிக்கை வைத்துள்ளனர்.





திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், ரெட்டியார்சத்திரத் திலிருந்து கன்னிவாடி செல்லும் சாலையில் பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு சொந்தமான நிலம் உள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த கனகசபாபதி என்பவர் பழனி கோவிலுக்கு சொந்தமான 60 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்திருப்பதாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவுப்படி கோவில் நில ஆக்கிரமிப்பை அகற்ற பழனி கோவில் உதவி ஆணையார் லட்சுமி வந்துள்ளார். அவருடன் பழனி கோவிலைச் சேர்ந்த நிரந்த மற்றும் தற்காலிகமாக காவல் பணியில் இருக்கும் நபர்களும் வந்துள்ளனர். திண்டுக்கல்லில் இருந்து 10 க்கும் மேற்பட்ட நிருபர்கள் செய்தி சேகரிப்பதற்காக அங்கு இருந்தபோது உதவி ஆணையாளர் லட்சுமி செய்தியாளர்களை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். மேலும், பேப்பர்களை செய்தியாளர்கள் முகத்தில் விட்டெறிந்ததாக கூறப்படுகிறது. அப்போது ஏற்பட்ட வாய்த் தகறாரில் கோவில் தற்காலிக ஊழியர்கள் திண்டுக்கல் செய்தியாளர்களை சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் திண்டுக்கல்லைச் சேர்ந்த செய்தியாளர்கள் செல்வம் (32), முரளிதரன் (36), ஆகியோருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து திண்டுக்கல்லில் இருந்து விரைந்து சென்ற திண்டுக்கல் பிரஸ் கிளப் நிர்வாகிகள் தலைமையில் ரெட்டியார்சத்திரம் காவல்நிலையத்தை முற்றுகையிட்டதோடு செய்தியாளர்கள் செல்வம் மற்றும் முரளிதரன் மீது தாக்குதல் நடத்திய குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டுமென கோரிக்கை வைத்தனர். படுகாயம் அடைந்த செல்வம் மற்றும் முரளிதரனை மருத்துவ சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவ மனையில் சேர்த்தனர். ரெட்டியார்சத்திரம் காவல் நிலையத்தினர் விசாரணை செய்து, பழனி கோவில் ஊழியர்கள் பொன்முருகன், சதீஸ் உட்பட நால்வர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். இந்நிலையில் ரெட்டியார்சத்திரத்தில் பத்திரிக்கையாளர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சித்தலைவர்களும், கடும் கண்டனம் தெரி வித்திருப்பதோடு குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் செய்தியாளர்களை அனைத்து கட்சி நிர்வாகிகளும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறிவருகின்றனர். இச்செய்தி காட்டுத்தீ போல் பரவியதால் தமிழகம் முழுவதும் பத்திரிக்கையாளர்கள் தங்கள் பகுதியில் காவல்நிலையங்களில் குற்றவாளிகளை கைது செய்ய வேண்டுமென புகார் கொடுத்து வருகின்றனர்.

## தமிழகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நலத்திட்டங்களால் தமிழக விளையாட்டு வீரர்கள் உலகளவில் சாதனை படைத்து வருகின்றனர் அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்

### ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட 10 கிராம ஊராட்சிளைச் சேர்ந்த 110 கிரிக்கெட் குழுவினருக்கு சொந்த செலவில் கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்

சின்னாளபட்டி, டிச.04

தமிழகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நலத்திட்டங்களால் தமிழக விளையாட்டு வீரர்கள் உலகளவில் சாதனை படைத்து வருகின்றனர் என்று ரெட்டியார்சத்திரத்தில் நடைபெற்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு, ரெட்யார்சத்திரம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட 10 கிராம ஊராட்சிளைச் சேர்ந்த 110 கிரிக்கெட் குழுவினருக்கு சொந்த செலவில் கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்.





திண்டுக்கல் மாவட்டம்; ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட சில்வார்பட்டி, கே.புதுக்கோட்டை, முருநெல்லிக்கோட்டை, குருநாதநாயக்கனூர், ஜி.நடுப்பட்டி, அழகுபட்டி, புதுச்சத்திரம், நீலமலைக்கோட்டை, கொத்தப்புள்ளி, பலக்கனூத்து உட்பட 10 ஊராட்சிகளில் வசிக்கும் மாணவர்களின் நலன் கருதியும், அப்பகுதியைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களின் நலன் கருதியும், 110 கிரிக்கெட் குழுவினருக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் சொந்த செலவில் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் விழா ரெட்டியார்சத்திரம் கதிர்நர்சிங்கபெருமாள் கோவில் மைதானத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் முன்னாள் பெருந்தலைவரும், தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலளார் ப.க.சிவகுருசாமி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி ஆகியோர் தலைமை தாங்கினார்கள். ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் மணி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலளாரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள், மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் மத்தியில் பேசும்போது இந்தியாவே திரும்பிப்பார்க்கும் அளவிற்கு தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை படைத்து வருகிறார்கள். குக்கிராமத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், விளையாட்டுத் துறையில் சாதனை படைத்து வருகிறார்கள். அதற்கு காரணம் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளும், சாதனை திட்டங்களும்தான் என்றார்.

விளையாட்டு வீரர்களுக்கு தமிழக அரசு வேலைவாய்ப்பில் 3 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கியதன்மூலம் கிராமப்புற விளையாட்டு வீரர்களும் அரசுப் பணியில் சேரும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் நலன் கருதி நான் அமைச்சராக இருந்தபோது அண்ணா பொறி யியல் கல்லூரி, இப்போது அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு இரண்டு ஒன்றியங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவந்ததுபோல் கிராமப்புற மாணவர்கள், மற்றும் விளையாட்டு வீரர்கள் நலன் கருதி, ரெட்டியார்சத்திரம் மற்றும் ஆத்தூர் ஒன்றியங்களில் மாபெரும் விளையாட்டு அரங்கம் அமைய உள்ளது என்றபோது அங்கு கூடியிருந்த மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் மகிழ்ச்சியில் கை தட்டி ஆரவாரம் செய்தனர். தொடர்ந்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இந்த விளையாட்டு அரங்கம், ஒரு விளையாட்டிற்கு மட்டுமல்ல, அனைத்து வகை விளையாட்டுகளையும் விளையாடி பயிற்சி பெறும் வகையில் அமைய உள்ளது என்றார்.

அதன் பின்னர், 10 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 110 கிரிக்கெட் குழுவினருக்கு கிரிக்கெட் போட்டிகளுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கி சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்தினார். விழாவில் அமைச்சரின் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், திமுக மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, நாகலட்சுமி ரமேஷ், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் முருநெல்லிக்கோட்டை சின்னு, அழகுபட்டி கந்தசாமி, புதுச்சத்திரம் மெர்ஸி (எ) லெட்சுமி, சில்வார்பட்டி தனலெட்சுமி ராமமூர்த்தி, கொத்தப்புள்ளி ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரி அன்பரசு, துணைத்தலைவர் எம்.வி.ரெங்கசாமி, மாவட்ட பிரதி நிதிகள் எல்லை. ராமகிருஷ்ணன், இளங்கோ, ரெட்டியார்சத்திரம் வட்டார காங்கிரஸ் தலைவர் முருகேசன், உட்பட திமுக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ் நன்றி கூறினார்.

# விண்டோஸ் மென்பொருள் கோளாறால் நாடு முழுவதும் விமான சேவைகள் முடக்கம்



ஹைதராபாத், டிச.4-

நாடு முழுவதும் பல்வேறு விமான நிலையங்களில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. ஹைதராபாத் விமான நிலையத்தில் பயணிகள் குழப்பம் அடைந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வாரணாசி உள்ளிட்ட பல்வேறு விமான நிலையங்களில் இன்று திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டன. கம்ப்யூட்டரில் செக் இன் அமைப்புகளில் நிகழ்ந்த இந்த கோளாறால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. உலகளாவிய அளவில் மைக்ரோசாப்ட் விண்டோஸ் சேவை செயலிழப்பு காரணமாக விமான சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக வாரணாசி விமான நிலையத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

வாரணாசியை போன்றே ஹைதராபாத் சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. தங்கள் விமானம் எப்போது புறப்படும் என்று தெரியாமல் நீண்ட நேரம் காத்திருந்த பயணிகள், ஒரு கட்டத்தில் எதிர்ப்பு குரல்களை எழுப்பி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அவர்களை அமைதிப்படுத்திய விமான நிலைய ஊழியர்கள், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினர். வாரணாசி, ஹைதராபாத் போன்றே பெங்களூரு, டில்லி விமான நிலையங்களிலும் விமானங்களின் வருகை மற்றும் புறப்பாடில் தாமதம் நிலவியது.

பெங்களூருவில் மொத்தம் 42 விமானங்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டு உள்ளதாக இண்டிகோ விமான நிறுவனம் அறிவித்துள்ளது. கடைசி நேர அறிவிப்புகளை தெரிந்து கொண்டு பயணங்களை திட்டமிடுமாறு விமான நிறுவனங்கள் அறிவுறுத்தி உள்ளன.

# டிஜிட்டல் கைது மோசடிக்கு துணிகர முயற்சி: அதிமுக எம்பி சி.வி.சண்முகம் அதிர்ச்சி புகார்



சென்னை, டிச.4-

டிஜிட்டல் கைது என்ற பெயரில் தன்னை மோசடி செய்ய முயற்சித்தது குறித்து, அதிமுக எம்பி சி.வி.சண்முகம் பார்லிமெண்ட் தெரு போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்துள்ளார்.

நம் நாட்டில், 'டிஜிட்டல் கைது' என்ற பெயரில் சைபர் கிரைம் மோசடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, மூத்த குடிமக்களை குறிவைத்து இந்த மோசடிகள் நடக்கின்றன. போலீஸ், அமலாக்கத்துறை, சி.பி.ஐ., என்ற பெயரில், 'மொபைல் போன் வீடியோ' அழைப்பு மூலம், பொதுமக்களை மிரட்டி பணம் பறிப்பதே டிஜிட்டல் கைது ஆகும்.

அந்தவகையில், தன்னை டிஜிட்டல் கைது செய்ய நடந்த மோசடி முயற்சி குறித்து, அதிமுக எம்பி சி.வி.சண்முகம் புகார் அளித்து இருக்கிறார். டில்லி பார்லிமெண்ட் தெரு போலீஸ் ஸ்டேஷனில் அவர் அளித்த புகாரில் கூறியிருப்பதாவது: காலையில் பார்லிமென்டிற்கு செல்லும் போது ஒரு போன் அழைப்பு வந்தது. அழைப்பாளர் ஆங்கிலத்தில் பேசி, தன்னை மும்பையைச் சேர்ந்த காவல்துறை அதிகாரி என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவர் என்னை ஒரு பயங்கரவாதி என்றார். பின்னர் உடனடியாக என்னைக் கைது செய்யப் போவதாக மிரட்டினார். பின்னர் அந்த அழைப்பு மூத்த போலீஸ் அதிகாரி என்று கூறிக்கொள்ளும் மற்றொரு நபருக்கு மாற்றப்பட்டது. இந்த இரண்டாவது அழைப்பாளர் மிரட்டல்களைத் தொடர்ந்தார். என் மீது 17 குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக பொய்யாகக் கூறினார்.

இந்த குற்றவாளிகள் தற்போதைய எம்.பி.யை குறிவைக்கும் அளவுக்கு துணிச்சலானவர்கள் மாறி இருக்கின்றனர். இது அச்சுறுத்தல்கள் விடுப்பது அதிகரித்து இருப்பதற்கு ஒரு சான்றாகும். விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டும். இவ்வாறு சி.வி.சண்முகம் கூறியுள்ளார்.

# இருமல் மருந்து விவகாரம் ஆலை உரிமையாளரின் ரூ.2கோடிசொத்து முடக்கம்



சென்னை டிச.4-

இருமல் மருந்து குடித்து 20க்கும் மேற்பட்ட குழந்தைகள் பலியான விவகாரத்தில், ஆலையின் உரிமையாளர் ரங்கநாதனுக்கு சொந்தமான ரூ.2.04 கோடி சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியது.

மத்திய பிரதேசத்தின் சிந்த்வாரா மாவட்டத்தில் 1 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்தன. இதுவரை 20க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழப்புக்கு, அவர்கள் உட்கொண்ட 'கோல்ட்ரிப்' இருமல் மருந்து தான் காரணம் என்பது தெரியவந்தது. இந்த மருந்து தமிழகத்தில் தான் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது.

தமிழகத்தின் காஞ்சிபுரத்தில், கோல்ட்ரிப் மருந்தை தயாரித்த, 'ஸ்ரீசன் பார்மா' நிறுவனத்தில் சோதனை நடத்தப்பட்டது. அதன் உரிமையாளர் ரங்கநாதன் கைது செய்யப்பட்டார். ஸ்ரீசன் பார்மா' இருமல் மருந்து தயாரிக்கும் நிறுவனத்தின் உரிமங்கள் முழுவதுமாக ரத்து செய்யப்பட்டு அந்நிறுவனம் மூடப்பட்டது.

இந்த வழக்கில், ஆலையின் உரிமையாளர் ரங்கநாதனுக்கு சொந்தமான ரூ.2.04 கோடி சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியது. அதன்படி, பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ், இரண்டு அடுக்குமாடி குடியிருப்புகளை பறிமுதல் செய்தததாக அமலாக்கத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# தங்கம், வெள்ளி விலை உயர்வு; ஒரு சவரன் ரூ. 96,480க்கு விற்பனை



சென்னை. டிச.4-

சென்னையில் நேற்று (டிச.,03) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.160 அதிகரித்து, ஒரு சவரன் ரூ. 96,480க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச நிலவரங்களால், நம் நாட்டில் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் நேற்று முன்தினம் ஆபரண தங்கம் கிராம், 12,070 ரூபாய்க்கும், சவரன், 96,560 ரூபாய்க்கும் விற்பனையானது.

வெள்ளி கிராம், 196 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று முன் தினம் (டிச.,02) தங்கம் விலை கிராமுக்கு, 30 ரூபாய் குறைந்து, 12,040 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு, 240 ரூபாய் குறைந்து, 96,320 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி விலையில் மாற்றமில்லை.

இந்நிலையில்நேற்று (டிச.,03) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.160 அதிகரித்து, ஒரு சவரன் ரூ. 96,480க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.20 அதிகரித்து ஒரு கிராம் ரூ.12,060க்கு விற்பனை ஆகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.201க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை கருணை அல்ல, உரிமை: முதல்வர் ஸ்டாலின் பேச்சு



சென்னை. டிச.4-

''மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை கருணை அல்ல, அவர்களுடைய உரிமை என்பது உணர்ந்து இந்த அரசு செயல்பட்டு கொண்டு இருக்கிறது'' என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடந்த மாற்றுத்திறனாளிகள் விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: மற்ற நாட்களை போல் அல்லாமல் இது வெறும் கொண்டாட்டத்திற்கான நாள் இல்லை. மாற்றுத்திறனாளிகளுக்கு சம உரிமை, சம வாய்ப்பை வழங்கியதை நினைவு கூரும் நாள் இது. சமுதாயத்தின் அனைத்து பொறுப்புகளிலும் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்தில் உள்ளாட்சி பிரதிநிதிகளாக, 3,631 மாற்றுத்திறனாளிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டு உள்ளனர். மேலும் 9 ஆயிரத்திற்கும் அதிகமான மாற்றுத்திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் அதிகாரம் பெற்று இருக்கிறார்கள். இது தான் திராவிட மாடல். திராவிட மாடல் அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்புகள் வழங்கி சம உரிமையுடன் சமூகத்தில் வாழ்வதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது.

மாற்றுத் திறனாளிகளை உட்சேர்க்கும் சமூக முன்னேற்றமே உலக நாடுகளின் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று ஐநா அறிவித்துள்ளது. இந்த கருப்பொருளையே மையமாக கொண்டு திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. சமத்துவம் மற்றும் சமூக நீதி ஆகியவற்றை உயிர்மூச்சாக கொண்டு தமிழக சமூகம் முன்னேற்றப்பாதையில் நடைபோட்டு வருகிறது.

2024ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சட்ட முன் வடி தாக்கல் செய்த மறுநாள், மாற்றுத்திறனாளி தோழர்கள் என்னை ஆரத்தழுவி கொண்ட உணர்ச்சி பொங்கிய அந்த தருணமே, எனக்கு கிடைத்த மிகப்பெரிய விருதாகும். மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை கருணை அல்ல, அவர்களுடைய உரிமை என்பது உணர்ந்து இந்த அரசு செயல்பட்டு கொண்டு இருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு பொருளாதார மேம்பாடுக்கு, அரசு துறைகளில் உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு, 4 இடஒதுக்கீடு முறையில் வழங்க உத்தரவிட்டு இருக்கிறோம். தனியார் துறையிலும் பணியில் அமர்த்த முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அரசுடன் சேர்ந்து மாற்றித்திறனாளிகளும் புதிய வரலாற்றை படைக்கப் போகிறார்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்

# திருப்பரங்குன்றம் வழக்கில் மேல்முறையீடு செய்த அரசுக்கு அண்ணாமலை கண்டனம்

சென்னை டிச.4-

ஆலயங்களைப் பராமரிக்க வேண்டிய துறையை, ஆலயங்களின் சொத்துக்களையும், நிதியையும் முறைகேடாகப் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஆலய நடைமுறைகளுக்கு எதிராகப் பயன்படுத்த, திமுக அரசுக்கு வெட்கமாக இல்லையா? என தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

அவரது அறிக்கை: திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் மலையில் உள்ள தீபத்தூணில், கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு, தீபம் ஏற்றி வழிபடலாம் என, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பளித்துள்ளது. உயர்நீதிமன்றத் தீர்ப்பினை, தமிழகம் முழுவதும் பொதுமக்கள், முருகப் பெருமான் பக்தர்கள் வரவேற்ற நிலையில், இந்தத் தீர்ப்பை எதிர்த்து, ஹிந்து சமய அறநிலையத்துறை, மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

இதையும் படிங்க

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இருக்கும் தீபத்தூணில் கார்த்திகை தீபம்

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இருக்கும் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றலாம்: உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பு

திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் மலையில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ஹிந்து சமய அறநிலையத்துறைக்கு என்ன அவசியம் வந்தது? ஆலயங்களைப் பராமரிக்க வேண்டிய துறையை, ஆலயங்களின் சொத்துக்களையும், நிதியையும் முறைகேடாகப் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஆலய நடைமுறைகளுக்கு எதிராகப் பயன்படுத்த, திமுக அரசுக்கு வெட்கமாக இல்லையா?



■ மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன்குமார், அரசு பள்ளி மாணவர்களுக்காக வகுப்பறை கட்டிடம், கழிப்பறை கட்டிடம் மற்றும் இதர கட்டிடங்களுக்கு சிங்கப்பூர்வாழ் தமிழரும் info-tech system நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலருக்கு தனிநபர் பங்களிப்பான ரூபாய். 3,70,49,403/ வழங்கியதற்காக பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.



# முதல்வர் ஸ்டாலின் உடன் காங்கிரஸ் ஐவர் குழு பேச்சுவார்த்தை

சென்னை, டிச.4-

தொகுதி பங்கீடு குறித்து காங்கிரஸ் அமைத்துள்ள 5 பேர் கொண்ட குழு இன்று (டிச.,03) முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பேச்சு நடத்தியது. ''இண்டி கூட்டணி வலிமையாக இருக்கிறது என்பதற்கு இன்றைய சந்திப்பு மிகப்பெரிய உதாரணம்'' என செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

திமுகவுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சு நடத்த 5 பேர் கொண்ட குழுவை, காங்கிஸ் தலைமை அறிவித்துள்ளது. இந்த குழுவில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சூரஜ், எம்.என்.ஹெக்டே, நிவேதிக் ஆல்வா, ராஜேஷ் குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த குழுவினர் இன்று (டிச.,03) முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பேச்சு நடத்தினர். பின்னர் காங்கிரஸ் தலைவர் செல்வ பெருந்தகை கூறியதாவது: காங்கிரஸ் மேலிடம் ஒரு குழு அமைத்து இருந்தார்கள்.

இந்த குழு இன்று மரியாதை நிமித்தமாக முதல்வர் ஸ்டாலினை சந்தித்து இருக்கிறது. அவர்கள் குழு அமைத்த பிறகு பேச்சுவார்த்தை தொடங்கும். கிழக்கா? மேற்கா? தெற்கா? வடக்கா என உங்களுக்கு சந்தேகம் இருந்தது. சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு உள்ளது. இண்டி கூட்டணி வலிமையாக இருக்கிறது என்பதற்கு இன்றைய சந்திப்பு மிகப்பெரிய உதாரணம். திமுக காங்கிரஸ் 4,5 தேர்தலில் வெற்றி கூட்டணி. தொகுதி பங்கீடு குறித்து பொறுந்திருந்து பாருங்கள். இவ்வாறு செல்வப்பெருந்தகை கூறினார்

# திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் தற்காலிக பக்தர்கள் காத்திருப்பு கூடம் அமைச்சர்.சேகர்பாபு திறந்துவைத்தார்



திருவண்ணாமலை, டிச.4-

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயிலிலுள்ள பேகோபுரம் வடமேற்கு மூலை முதல் அம்மணி அம்மன் கோபுரம் (வடஒத்தவாடைத்தெரு) இடையே பக்தர்கள் தற்காலிக காத்திருப்பு லைன் கூடத்தை அமைச்சர்கள் எ.வ.வேலு சேகர்பாபு ஆகியோர் நேற்று திறந்துவைத்தனர்.

இதில் துணை சபாநாயகர் பிச்சாண்டி, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல்தலைமை செயலாளர் மணிவாசன், மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர், மேயர் நிர்மலாவேல்மாறன் கோவில் இணை ஆணையர் பரணிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ்நாடு முதலமைச்சரின் சீரிய வழிகாட்டுதலின்படி இந்து சமய அறநிலையத்துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பழமையான கோயில்களை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து பாதுகாத்தல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. அதன்படி அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயிலில் தற்காலிகமாக பக்தர்கள் காத்திருப்பு கூடத்தை பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் நேற்று திறந்துவைத்தனர்.

அதனை தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு வெளி மாவட்டங்களிலிருந்தும், வெளி மாநிலத்திருலிருந்தும் ஆன்மிக பெருமக்கள் வருகை புரிகிறார்கள். கோயிலுக்குள் நுழைவதில் பல்வேறு இடர்பாடுகள் உள்ள காரணத்தினால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திருவண்ணாமலை கோயிலை சுற்றி ரூ.3.37 கோடி மதிப்பீட்டில் இந்திரலிங்கம், அக்னி லிங்கம், எமலிங்கம், நிருதி லிங்கம், வருண லிங்கம், வாயு லிங்கம், குபேர லிங்கம், ஈசான்ய லிங்கம் என்று 8 பகுதிகளாக இந்த காத்திருப்பு கூடம் அனைவரும் பாராட்டும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. ஆன்மிக பெருமக்கள், வயதானவர்கள் அமர்ந்து செல்லக் கூடிய வகையில் அமைக்கப்பட்டு இருக்கிறது. மேலும் காத்திருப்பு கூடதில் வண்ண தொலைகாட்சிகள் அமைக்கப்பட்டு திருக்கோயிலில் நடைபெறும் அனைத்து பூஜைகள், விழாக்கள் போன்ற நிகழ்வுகளை கண்டுகளிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றார். இந்த நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் ராஜ்குமார் தாசில்தார் மோகனராமன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# 3 மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யும்: தனியார் வானிலை ஆய்வாளர் தகவல்

திருச்சி, டிச.4-

புதுச்சேரி மரக்காணம் இடையிலான பகுதியைக் கடந்த தீவிர தாழ்வுப் பகுதியால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யும் என்று தனியார் வானிலை ஆய்வாளர் ந.செல்வகுமார் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் கூறியதாவது: தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி புதுச்சேரிக்கு தெற்கு பகுதியில் உள்ள மாவட்டங்கள் ஊடாக தெற்கு, தென்மேற்கு திசையில் நகரும்.

இது இன்று (டிச.3) முதல் 3 நாட்களுக்கு டெல்டா மாவட்டங்கள் மற்றும் அதையொட்டியுள்ள உள் மாவட்டங்கள் நோக்கி நகர்ந்து, சாதாரண தாழ்வுப் பகுதியாகவோ அல்லது ஒரு காற்று சுழற்சியாகவோ செயலிழந்து, டெல்டா, தென் மாவட்டங்கள் ஊடாக அரபிக்கடலை நோக்கி நகரும்.

இதன் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் இன்று அதிகாலை மற்றும் காலை நேரங்களில் மீண்டும் அதிகனமழை பெய்யும்.

செங்கல்பட்டு மாவட்டத்தைவிட சென்னைக்கு சற்று கூடுதலாகவும், அதைவிட திருவள்ளூர் மாவட்டத்துக்கு இன்னும் சற்று கூடுதலாகவும் மழைப்பொழிவு இருக்கும். வட உள்மாவட்டங்களிலும் மிதமானது முதல் கனமழை பெய்யும்.

மேலும் வரும் 4, 5ம் தேதி களில் டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்கள், உள் மாவட்டங்கள் என அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்யும்.

வரும் 6,7ம் தேதிகளில் புதிய காற்று சுழற்சியொன்று வட இலங்கை வந்து, தமிழகத்தில் மழைப்பொழிவைத் தீவிரப் படுத்தும். இது இலங்கைக்கு மீண்டும் அச்சுறுத்தலை கொடுக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

# “நிதி ஒதுக்கியும் மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்படவில்லை தமிழக அரசை சாடிய விஜய்

சென்னை, டிச.4-

மழைநீர் வடிகால் வசதியை ஏற்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்தும், நான்கரை ஆண்டுக்கால ஆட்சியில் பணிகள் முடிக்கப்படவில்லை என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.



டிட்வா புயல் எதிரொலியாக, சென்னை, ராணிப்பேட்டை திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில், இது குறித்து விஜய் தனது எக்ஸ் தளத்தில், “சென்னை உள்பட தமிழ்நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வடிகால் வசதிகள் முறையாகவும் முழுமையாகவும் செய்து முடிக்கப்படாததே மக்களின் இந்தத் துயரத்திற்குக் காரணம். பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மழையால் பாதிப்பிற்கு உள்ளாகும் மக்களுக்குத் தேவையான உதவிகளைப் பாதுகாப்போடு செய்திட வேண்டும் என்று கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மழைநீர் வடிகால் வசதியை ஏற்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்தும், நான்கரை ஆண்டுக்கால ஆட்சியில் பணிகள் முடிக்கப்படவில்லை. மக்கள் மீது சிறிதேனும் அக்கறையிருந்திருந்தால் கொஞ்சமாகப் பெய்த மழைக்கே இவ்வளவு தண்ணீர் தேங்கியிருக்காது.

மீதமுள்ள பருவமழைக் காலத்திலாவது மக்கள் சிரமத்திற்கு உள்ளாகாத வகையிலும், அவர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத வகையிலும் மழைநீர் வெளியேறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# சென்னையில் தொடரும் மழை: குடியிருப்புகளை சூழந்த தண்ணீரை வெளியேற்றும் பணி தீவிரம்

சென்னை, டிச.4-

சென்னையில் கடந்த சில நாட்களாக, டிட்வா புயல் காரணமாக கொட்டி தீர்த்த கனமழையால் குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்துள்ளது. இதனை அகற்றும் பணி நடக்கிறது.



வங்க கடலில் உருவான, 'டிட்வா' புயல் வலுவிழந்த போதிலும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இரண்டு நாட்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக சென்னையின் பல பகுதிகளில், வெள்ள நீர் சூழ்ந்து பாதிப்பு ஏற்பட்டது.

குறிப்பாக, வடசென்னையில் அதிக பாதிப்பு ஏற்பட்டது. மாதவரம், கொளத்துார், பெரம்பூர், வியாசர்பாடி, புரசைவாக்கம், கொடுங்கையூர், புழல் செங்குன்றம் ஜி.என்.டி., சாலை, விளாங்காடுபாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் தேங்கிய மழைநீரை அகற்றும் பணி நடந்து வருகிறது.

சென்னையில் உள்ள 27 சுரங்கப்பாதைகளில் தேங்கியுள்ள மழைநீர் உடனடியாக மின் மோட்டார் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது.





# புதிதாக மின்மயானம் அமைக்க எதிப்பு பண்ணைப்புரம் பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து பொதுமக்கள் சாலை மறியல்

தேனி. டிச.4

தேனி மாவட்டம் பண்ணைப்புரம் பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளன செல்வநாயகபுரம் காந்திநகர் இந்தப் பேரூராட்சியில் புதிதாக மின் மயானம் அமைப்பதற்கு காலையில் பூமி பூஜை நடைபெற்று உள்ளது.

குறிப்பாக மக்கள் வாசிக்கும் பகுதி அருகே புதிதாக மின் மயானம் அமைக்க இருப்பதால் பொதுமக்கள் மக்கள் வசிக்கும் பகுதியில் மின் மயானம் அமைக்க கூடாது என்று கூறி சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து உத்தமபாளையம் போடி மாநில நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றன பேரூராட்சி மன்ற தலைவர் பொதுமக்களுடன் பேச்சு வார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டு

பேச்சுவார்த்தை பின்பு சாலை மறியல் கைவிடப்பட்டது.பட்டியல் சமுதாய மக்கள் வசியக்கூடிய இடத்தில் மின் மயானம் வேண்டாம் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

# பிரதமர் மோடி குறித்து காங். பிரமுகர் வெளியிட்ட ஏஐ வீடியோவால் சர்ச்சை

புதுடெல்லி, டிச.4-

பிரதமர் மோடியை தேநீர் விற்பவர் போல் சித்தரித்து மலினமான வீடியோ ஒன்றை காங்கிரஸ் தேசிய செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரான ராகினி நாயக் வெளியிட, அது தற்போது தேசிய அளவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் மோடி தனது இளம் வயதில் தந்தைக்கு உதவியாக குஜராத் வாத்நகர் ரயில் நிலையத்தில் தேநீர் விற்பனை செய்ததாக தகவல்கள் உண்டு. அதை பிரதமரே பல மேடைகளில் கூறியிருக்கிறார். “மிக எளிமையான பின்னணியில் இருந்து வந்திருந்தாலும் தான் கொண்ட கொள்கையில் உறுதியாக, தேசப் பணியில் தீவிரமாக ஈடுபட்டதால்தான் நான்



நாட்டின் பிரதமராக ஆனேன்.” என்று மோடி கூறியிருக்கிறார்.

ஆனால், எதிர்க்கட்சிகள் பல நேரங்களில் பிரதமரையும் தேநீர் விற்பனையையும் வைத்து பகடி செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது. அந்த கேலிகளுக்கெல்லாம் ஒரு படி மேலே சென்று ஒரு சர்வதேச அரங்கில் சிவப்புக் கம்பள வரவேற்பு பின்னணியில் பிரதமர் மோடி தேநீர் விற்பது போல் வீடியோ ஒன்றை ஏஐயில் உருவாக்கி வெளியிட்டுள்ளார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராகினி நாயக் என்பவர்.

இவர் மருத்துவர் எனத் தெரிகிறது. காங்கிரஸ் தேசிய செய்தித் தொடர்பாளர் பொறுப்பில் இருக்கும் இவர், இவ்வாறாக தனிநபர் விமர்சனத்தை மிகவும் மலினமான சிந்தையோடு நாட்டின் பிரதமருக்கு எதிராக முன்னெடுத்துள்ளதற்கு அவருக்கு கடும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த டிச.1ம் தேதி தொடங்கியது. இரண்டு நாட்களாசார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்த விவகாரத்தால் நாடாளுமன்றம் முடங்கியது.

இதற்கிடையில் மத்திய அரசு செல்போன்களில் சஞ்சார் சாத்தி செயலியை தயாரிக்கும்போதே கட்டமைக்க வேண்டும் என்று செல்போன் நிறுவனங்களுக்கு உத்தரவிட்டிருப்பது சர்ச்சையாகி அதுவும் நாடாளுமன்றத்தில் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. புதிய தொழிலாளர் சட்ட விவகாரம் எனப் பல பிரச்சினைகளுக்கு எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்து வரும் சூழலில் இந்த ஏஐ வீடியோ காங்கிரஸ் கட்சி மீது அதிருப்தியை ஏற்படுத்துவதாக வந்து சேர்ந்துள்ளது.

மேலும், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இந்தியாவுக்கு வரவிருக்கிறார். இந்தச் சூழலில் பிரதமரை மோசமாக சித்தரித்து காங்கிரஸ் பிரமுகர் ஏஐ வீடியோ வெளியிட்டிருப்பது சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

# சின்னஇலந்தைகுளம் விளையாட்டு அரங்கத்தில் மழை நீர் தேங்கி அருகாமையில் உள்ள வீடுகளுக்கு சென்றதால் பொதுமக்கள் சாலை மறியல்

அலங்காநல்லூர், நவ.04

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே சின்ன இலந்தைக்குளத்தில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம், ரூ 3 கோடி மதிப்பில் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு விளையாட்டு போட்டிகள் இங்கு நடந்தது. இதில் தற்போது பெய்து வரும் பருவ மழையின் காரணமாக நேற்று முன்தினம் இந்த விளையாட்டு அரங்கம் முழுவதுமாக மழை தண்ணீரால் நிரம்பியது. இதனால் தகவலறிந்த அரசு அதிகாரிகள் மைதானத்தின் மேற்கு பகுதியில் உள்ள சுவற்றில் துளையிட்டு தண்ணீரை வெளியேற்றினர்.

இது பற்றி அறிந்ததும் அதிமுக மாவட்ட செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான ஆர்.பி.உதயகுமார் தண்ணிர் தேங்கியுள்ள



விளையாட்டு அரங்கத்தை நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து அந்த தண்ணீருக்குள் வேட்டியை மடித்து கட்டி கொண்டு நடந்து சென்று பார்த்தார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

நீர்வழித்தடங்களை முறையாக ஆய்வு செய்யாமல் கட்டிடத்தை கட்டிவிட்டனர். இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து நாங்கள் மாவட்ட கலெக்டருக்கு புகார் செய்ய உள்ளோம்.

சரியான முறையில் அமைத்திருந்தால் இந்த சேதம் வந்திருக்காது. இவ்வாறு முன்னாள் அமைச்சர் உதயகுமார் கூறினார். அப்போது முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கருப்பையா, மாணிக்கம், மகேந்திரன், அதிமுக ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன், மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

மேலும் முன்னதாக அதே சின்ன இலந்தைகுளத்தில் உள்ள கம்மாபட்டி வசிக்கும் சுமார் 20க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் மழை நீர் புகுந்தது. இதனால் அதில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்பட்டனர். இதையொட்டி பொதுமக்கள் மழை நீரை வெளியேற்ற வலியுறுத்தி, அலங்காநல்லூர் வாடிப்பட்டி செல்லும் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். இது பற்றி தகவலறிந்த வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் நேரில் வந்து மறியலில் ஈடுபட்டவர்களிடம்பேச்சு வார்த்தை நடத்தினர். அதன் பின்னர் ஜேசிபி இயந்திரம் மூலம் குடியிருப்பு பகுதியில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கபட்டது.



# உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் உரிமைகளுக்கான சங்கம் பிரச்சார பயணம்

அவிநாசி, டிச.4-

அவிநாசி ஒன்றிய குழு சார்பில் திருமுருகன்பூண்டியிலிருது உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டும் மாநில மாநாட்டு நோக்கங்களை விளக்கியும் பிரச்சாரப் பயணத்தை தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் நடத்தியது. பேரணிக்கு ஐ ஃபாருக் தலைமை தாங்கினார் எஸ் கருப்பசாமி முன்னிலையில் கமிட்டி உறுப்பினர்கள் எண் ஜோதி பி ரவி மூர்த்தி பி மஹாதேவி ஆகியோர் பிரச்சாரப் பயணத்தை துவக்கி வைத்தனர்.

பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்தனர். அவர்கள் கூறியதாவது: வீட்டு மனை பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உடனே வழங்க வேண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கு 100 நாள் வேலையில் நாலு மணி நேரமும் முழுமையாக ஊழியம் வழங்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

# அமெரிக்காவில் ‘பாம் சைக்ளோன்’; பனிப்புயல் கொட்டுவதால் 5.5 கோடி பேர் பாதிப்பு

நியூயார்க், டிச.4-

அமெரிக்காவின் பெரும்பாலான நகரங்களை பனி மூழ்கடித்துள்ள நிலையில், ஒரே வாரத்தில் மூன்றாவது பனிப்புயல் உருவாக்கி உள்ளது. இது 'பாம் சைக்ளோன்' எனப்படும் அதி தீவிர பனி புயலால் 5.5 கோடி பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

அமெரிக்காவில் நவம்பர் துவங்கி மார்ச் வரை குளிர்காலம் நீடிக்கும். இந்த சமயத்தில் அமெரிக்காவை கடும் பனிப்புயல்கள் தாக்கும். வெப்பநிலை மைனஸ் 10 முதல் மைனஸ் 25 டிகிரி செல்ஷியஸ் வரை சரியும். நியூயார்க், மாசசூசெட்ஸ், பென்சில்வேனியா, மைனே போன்ற வட கிழக்கு மாகாணங்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படும்.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இரு பனிப்புயல்கள் அமெரிக்காவை தாக்கி உள்ளன. 33 சதவீத பரப்பை பனி மூடியுள்ளது. கடந்த 2019ல் இதே காலக்கட்டத்தில் 41



சதவீத அமெரிக்க நிலப்பரப்பு பனியால் மூடியிருந்தது. தற்போது வீசும் பனிப்புயலால், கொலராடோ மாகாணத்தின் ராக்கி மலைப்பகுதியில் ஒரு அடி உயரத்திற்கு பனி விழுந்ததாக தேசிய வானிலை சேவை தெரிவித்துள்ளது.

கன்சாஸ் சிட்டியில் 10 செ.மீ., அளவும், செயின்ட் லுயிசில் 7 செ.மீ., அளவும் பனி பதிவாகியுள்ளது. செயின்ட் லூயிஸ் நகரில் பனி படர்ந்ததன் காரணமாக, நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் பல விபத்துகள் நேற்று ஏற்பட்டன. மிகுந்த கவனத்துடன் வாகனத்தை இயக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய பனிப்புயல் ஒன்று நேற்று அதி தீவிர பனிப்புயலாக உருவாகியுள்ளது. காற்றின் அழுத்தம் மில்லிபார் என்ற அளவீட்டின்படி கணக்கிடப்படுகிறது. 24 மணிநேரத்தில் 24 மில்லிபார் அளவுக்கு காற்றழுத்தம் குறைந்தால் அது 'பாம் சைக்ளோன்' எனப்படும் அதி தீவிர புயலாக கருதப்படும். அதி தீவிர பனி புயலால் 5.5 கோடி பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

அமெரிக்காவின் வடமேற்கில் மோண்டானா துவங்கி கிழக்கு கடற்கரையில் உள்ள மைனே வரை 2,500 கி.மீ., நீளத்துக்கு 27 மாகாணங்களுக்கு அதிதீவிர பனிப்புயல் எச்சரிக்கையை வானிலை மையம் விடுத்துள்ளது.

பயணங்களை தவிர்க்கவும், உணவு, தண்ணீர், மருந்து ஆகியவற்றை சேமிப்பில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பல மாநிலங்களில் கடும் பனிப்புயலால் பாதிக்கப்பட்டு உள்ளன.

# வடகிழக்குப் பருவமழைடித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம்

சென்னை, டிச.04-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து 01.12.2025 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய உத்தரவின்படி, வடகிழக்குப் பருவமழைடித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மாண்புமிகு வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. பயிர் குறித்து

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை இவ்வாண்டு 16.10.2025 அன்று துவங்கி அனைத்து மாவட்டங்களிலும் பெய்து வருவதுடன், அக்டோபர் மாதம் நிலவிய மோந்தா புயல் மற்றும் தற்போதைய டித்வா புயல் காரணமாக கனமழை மற்றும் அதி கனமழையாக இதுவரை 10 சதவீதம் கூடுதலாக மொத்தம் 401.8 மி.மீ மழை பதிவாகியுள்ளது. தற்போதைய நிலவரப்படி 68,226 எக்டர் பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பாதிக்கப்பட்டுள்ள நெல்வயல்களில் தேங்கியுள்ள வெள்ள நீரை உடனடியாக வடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதிக அளவில் அடைப்பு ஏற்பட்டு, வெள்ள நீர் தேங்குவதற்குக் காரணமாக உள்ள வாய்க்கால்களைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் தொடர்புடைய நீர்வள ஆதாரத்துறை அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அடைப்பினை நீக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேளாண்மைப் பொறியியல் துறையின் செயற்பொறியாளர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

மேலும், வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் மாவட்ட அலுவலர் முதல் கள அலுவலர்கள் வரை அனைவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்து பயிர்சேத நிலைகளுக்கு ஏற்ப விவசாயிகளுக்கு உரிய பயிர் மேலாண்மை ஆலோசனைகள் வழங்கவேண்டும் என்றும் உடனடியாக, வருவாய்த் துறையுடன் இணைந்து வயல் ஆய்வு மூலம் 33 சதவீதத்திற்கு மேல் ஏற்பட்டுள்ள பயிர் பாதிப்பைக் கணக்கீடு செய்து டிசம்பர் மாத இறுதிக்குள் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் மாவட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும், நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பயிர் வாரியான தெளிவான அறிவுரைகளை நேரடியாக விவசாயிகளுக்கு வழங்குவதுடன் பல்வேறு சமூக ஊடகங்கள் வாயிலாகவும் விவசாயிகளுக்கு தெரிவித்திட வேண்டும் என்றும், பூச்சி, நோய் தாக்குதலைத் தொடர்ந்து கண்காணித்து, பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், இது போன்ற இயற்கை இடற்பாடுகள் நிகழும் நேரங்களில் விவசாயிகளுக்கு துறை அலுவலர்கள் உறுதுணையாக இருந்து அவர்களுக்கு உதவிடவும் கேட்டுக்கொண்டார்.

விதைகள், உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும், குறிப்பாக, அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் போதுமான அளவு யூரியா இருப்பு வைக்கப்பட வேண்டும் என்றும், மறு பயிர் செய்வதற்குத் தேவையான விதைகள், பூச்சி, நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பயிர்களைக் காப்பாற்றிட பயிர் பாதுகாப்பு மருந்துகளை இருப்பு வைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அலுலவர்களுக்கு அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ட்ரோன் மற்றும் செயற்கைக்கோள் புகைப்படங்கள் வாயிலாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் சேதம் குறித்த ஆய்வு மேற்கொண்டு தொடர்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்றும் வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வேளாண் விஞ்ஞானிகள் துறை அலுவலர்களுடன் இணைந்து பயிர் வாரியான பொதுவான பயிர் மேலாண்மைக்கான தொழில்நுட்ப அறிவுரைகளை தத்தம் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், சமுதாய வானொலி (திவி ரெயின்போ வானொலி பண்பலை) மூலம் தொடர்ந்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அன்றாடம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவுறுத்தினார். வழங்கிடவேண்டும் என்றும்

வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவ்வப்போது ஏற்படும் பயிர் பாதிப்பு நிலவரங்களை வட்டார வேளாண் அலுவர்களுக்குத் தெரிவித்து உரிய ஆலோசனைகளைப் பெற்று பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் வேளாண்மை உழவர் என்று விவசாயிகளை மாண்புமிகு நலத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மேலும், ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.12.2025 ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு, அக்டோபர், 2025 மாதத்தில் பெய்த கனமழையால் 33 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு நிவாரணம் பெறுவதற்கான கருத்துருவை மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலோடு உரிய படிவத்தில் உடன் அரசுக்கு அனுப்பிட வேண்டும் என்று கள அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர். திரு.வ.தட்சிணாமூர்த்தி வேளாண்மைத்துறை இயக்குநர் திரு.பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை திரு.பெ.குமாரவேல் பாண்டியன், இயக்குநர் வேளாண்மைப் பொறியியல்துறையின் தலைமைப் பொறியாளர் திரு.ஆர்.முருகேசன் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் (காணொலியில்) கலந்து கொண்டனர்.




■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஒன்றியம், அவனியாபுரம் பிரசன்னா காலனியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் திருநகரை சேர்ந்த சிங்கப்பூர் வாழ் தமிழரும் INFO-TECH SYSTEM நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலரான திலிப்பாபு, பங்களிப்பில் மாணவர்களுக்காக ரூபாய்.1.40 கோடி மதிப்பீட்டில் 9 வகுப்பறைகள் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப.,திறந்து வைத்து பார்வையிட்டார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன் உடன் உள்ளார்.



■ தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா2025 வில் மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், வழங்கினார்.



■ தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா2025 வில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், வழங்கினார்.




■ தேனி மாவட்டம் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2025 மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் ஊதா நிற மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.



■ மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சக்கிமங்லம் கிராமத்தில் ரூபாய்.3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்கான பூமி பூஜையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் உள்ளார்



■ நீலகிரி மாவட்டம் உதகை மிஷினெரி ஹில் பகுதியில் இயங்கி வரும் மாரநாத குழந்தைகள் காப்பகத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.



■ பன் புட் ரெஸ்டாரன்ட் தளி ரோடு, ஆண் கள் மேல்நிலை பள்ளி, எதிரில் பன், புட் ரெஸ்டாரன்டை உடுமலை நகர்மன்ற தலைவர் மத்தின் அவர்கள் திறந்து வைத்தார். ரெஸ்டாரண்ட் உரிமையாளர்கள் நப்சல், அப்துல் லத்தீப், ரஃபிக், அயூப் ஆகியோர் உடன் இருந்தார்கள். இந்நிகழ்ச்சியில் குட்டை பள்ளிவாசல் தலைவர் பகதூர் , கலந்து கொண்டார்.



■ மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், திருவேடகம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்.

## கரூர்: தவெக கூட்ட நெரிசல் நிகழ்விடத்தில் உச்ச நீதிமன்ற ஓய்வு நீதிபதி அஜய் ரஸ்தோகி ஆய்வு

கரூர், டிச.04-

தவெக பிரச்சாரக் கூட்டம் நடந்த கரூர் வேலுசாமிபுரத்தில் உச்ச நீதிமன்ற ஓய்வு நீதிபதி அஜய் ரஸ்தோகி ஆய்வு செய்தார். மேலும் தவெக அனுமதி கேட்ட உழவர் சந்தை, லைட்ஹவுஸ் முனை, பேருந்து நிலைய ரவுண்டானாவிலும் ஆய்வு செய்தார்.

கரூர் வேலுசாமிபுரத்தில் செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100 க்கும் மேற்ப ட்டோர் காய மடைந்தனர். இவ்வழக்கை சிபிஐ விசாரிக்க உச்ச நீதிமன்றம் அக்.13ம் தேதி உத்தரவிட்டது.

அப்போது உச்ச நீதிமன்ற ஓய்வுப்பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி, ஏடிஜிபிக்கள் சோனல் வி.மிஸ்ரா, சுமித் சரண் ஆகியோர் மேற்பார்வையில் சிபிஐ அதிகாரி பிரவீண்குமார் தலைமையில் விசாரணை நடத்த உத்தரவிட்டது.

அக்.16ம் தேதி சிபிஐ கரூர் வந்த நிலையில் அக்.17ம் தேதி எஸ்ஐடி ஆவணங்களை சிபிஐயிடம் ஒப்படைத்தது.

இவ்வழக்கில் 300 க்கும் மேற்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பியும், போனில் அழைத்தும், நேரில் சென்றும் கடந்த அக்.30ம் தேதி முதல் வேலுசாமிபுரத்தில் கடைவைத்திருப்பவர்கள், ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார், பவர் கிரிட், மின்வாரியம், நெடுஞ் சாலைத்துறை, உயிரிழந்தவர்கள் குடும்பத்தினர், காயமடைந்தவர்கள், சமூக வலைத்தளங்களில் இதுதொடர்பாக கருத்துகள் பதிவிட்டவர்கள், கரூர் நகர இன்ஸ்பெக்டர், டிஎஸ்பி செல்வராஜ் தவெக தலைவர்களிடம் விசாரணை நடைபெற்றது.

சிபிஐ விசாரணையை மேற்பார்வையிட உச்சநீதிமன்ற ஓய்வு நீதிபதி அஜய் ரஸ்தோகி, ஏடிஜிபிக்கள் சோனல் வி.மிஸ்ரா, சுமித் சரண் ஆகியோர் நேற்று வருகை தந்தனர். இதனையொட்டி சிபிஐ டிஐஜி அது ல்குமார் தாக்கூர் நேற்று முன்தினம் கரூர் வந்தார்.

சிபிஐயினர் தங்கி விசாரணை நடத்தி வரும் கரூர் சுற்றுலா மாளிகை முகாம் அலுவலகத்திற்கு சிபிஐ டிஐஜி அதுல்குமார் தாக்கூர் விசாரணை தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு ஆவணங்களை பார்வையிட்டார் தெரிகிறது. தொடர்ந்து கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக பிரச்சார கூட்டம் நடந்த இடத்தை பார்வையிட்டார்.

கரூர் சுற்றுலா மாளிகை சிபிஐ முகாம் அலுவலகத்தில ஒய்வு நீதிபதி அஜய் ரஸ்தோகி, ஏடிஜிபிக்கள் சோல் வி.மிஸ்ரா, சுமித் சரண் ஆகியோர் நேற்று வருகை நந்தனர். ஆட்சியர் மீ.தங்கவேல், ஐஜி ஜோஷ் நிர்மல்குமார், எஸ்பி கே.ஜோஷ்தங்கையாக ஆகியோர் ஆஜராகி சம்பவம் குறித்து விளக்கம் அளித்தனர்.

பல்வேறு கட்சிகள், அமைப்புகளை சேர்ந்தவர்கள், உயிரிழந்தவர்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள், காயமடைந்தவர்கள், தவெகவினர் ஆஜராகினர். இதில் நேரமின்மையால் சிலரை இன்று (டிச. 3ம் தேதி) ஆஜராகக்கூறி அனுப்பி வைத்தனர்.

கரூர் சுற்றுலா மாளிகைக்கு இன்று (டிச. 3ம் தேதி) 2வது நாளாக உச்ச நீதிமன்ற ஓய்வு நீதிபதி அஜய் ரஸ்தோகி கோவையில் இருந்து கார் மூலம் வருகை தந்தார். இதையடுத்து ஏடிஜிபிக்கள் சோனல் வி.மிஸ்ரா, சுமித் சரண் ஆகியோர் வருகை தந்தனர். மனு அளிக்க வந்து நேற்று திருப்பியனுப்பட்ட சிவா, கட்சி நிர்வாகி உள்ளிட்டோர் வந்திருந்தனர்.

இந்நிலையில் ஓய்வு நீதிபதி அஜய் ரஸ்தோகி, தவெக பிரச்சார கூட்டம் நடைபெற்று 41 பேர் உயிரிழந்த கரூர் வேலுசாமிபுரத்தை பார்வையிட்டார். சுமார் 20 நிமிடங்கள் அங்கிருந்தவரிடம் டிஐஜி அதுல் குமார் தாக்கூர், எஸ்.பி. பிரவீண்குமார், கரூர் எஸ்.பி. கே.ஜோஷ் தங்கையா ஆகியோர் சம்பவம் குறித்து விளக்கினர்.

அதன்பின் தவெக அனுமதி கேட்ட கரூர் உழவர் சந்தை, கரூர் லைட்ஹவுஸ் முனை, கரூர் பேருந்து நிலைய ரவுண்டானா ஆகியஇடங்களையும் பார்வையிட்டார். லைட்ஹவுஸ் முனையில் பெட்ரோல் பங்க், அமராவதி ஆறு உள்ளிட்டவை இருப்பது குறித்தும் விளக்கப்பட்டது. கரூர் பேருந்து நிலைய ரவுண்டானாவை பார்வையிடும் போது திருச்சி மத்திய மண்டல ஐஜி ஜோஷி நிர்மல்குமார் வந்து இணைந்து கொண்டார்.

இதையடுத்துஅஜய் ரஸ்டோகி கரூர் சுற்றுலா மாளிகைக்கு திரும்பினார். சிபிஐ விசாரணைக்கு பிரேதப் பரிசோதனை செய்த 4 மருத்துவர்கள் உள்ளிட்டோர் ஆஜராகினர்.

கரூர் எஸ்.பி. கே.ஜோஷ் தங்கையா, ஏடிஎஸ்பிக்களிடம் 2வது நாளாக 2 மணி நேரத்திற்கு மேலாக விசாரணை நடைபெற்றது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000